பேசும்போது இதைத்தான் நான் சொன்னேன். இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையை வெற்றிகரமாக சமாளித்த அரசு, அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர்ப் பஞ்சம் என்று குறிப்பிட்டதை பற்றாக்குறை என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 142 வருடங்களில் இல்லாத வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னர் நீங்கள் பேசும்போது குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசினீர்கள். அப்போது பிரச்சினையே இல்லை, சமாளித்தாகிவிட்டது. அந்த நேரத்தில் சென்னைக்குக்கூட 450 MLD– தண்ணீர் தான் கொடுத்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பின்னர் 520 MLD தண்ணீர் கொடுக்கும்போதுதான் அந்தப் பிரச்சினை பற்றியெல்லாம் நீங்கள் பேசினீர்கள். இப்போது எல்லா மாவட்டங்களிலும் எவ்வித பிரச்சினையும் இல்லை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில்தான் மழை குறைவாக இருக்கிறது. நிலத்தடி நீர்மட்டம் உயரவில்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், எங்களுடைய உள்ளாட்சித் துறையின் மூலமாகவும் அதற்குத் தேவையான நடவடிக்கை சிறப்பான முறையிலே எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆண்டிப்பட்டிக்கு தனியாகத் திட்டம் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றைக்கும் தேனி மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி தொகுதிக்கு தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

119—

தூண்டில் வளைவுகள்

***5054—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2020 மார்ச் 18]

ராதாபுரம் தொகுதி, உவரி மற்றும் பெருமணலில் அமைக்கப்பட்ட தூண்டில் வளைவுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, உவரி மற்றும் பெருமணல் கிராமங்களில் அமைக்கப்பட்ட தூண்டில் வளைவுகளைச் சீரமைத்திடும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: 'ஓ காற்றே'! மாரிக் காலம் இப்பொழுது வந்தால், வசந்த காலம் என்ன தொலைவிலா இருக்கும்?' இது ஷெல்லியினுடைய கவிதை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவிதையை இந்த இடத்திலே எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த இரண்டு நாட்களாக இந்த அவையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ராதாபுரம் தொகுதிக்கு அள்ளித் தந்திருக்கிற திட்டங்கள் அடுக்கடுக்காய் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில், எங்களுடைய ராதாபுரம் தொகுதியிலே இருக்கின்ற உவரியிலும், பெருமணலிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட தூண்டில் வளைவுகளைச் சற்று சீரமைக்க முடியாமல் இயற்கையினுடைய தாக்குதல் இருந்தது. கடலின் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் சற்று சிதிலமடைந்திருப்பதை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். எதற்காக இதைக் கேட்கிறேன் என்றால், மீனவர்களுடைய வாழ்வாதாரம்தான் இந்த தூண்டில்வளைவுகள். அதுமட்டுமல்ல, அருகிலே இருக்கக்கூடிய கூட்டப்புளி மற்றும் கூடுதாழையிலும் கூடுதலாக இரண்டு தூண்டில் வளைவுகள் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தோம். மாண்புமிகு அம்மா அவர்களும் அதைச் செய்து தருவதாக உறுதியளித்திருந்தார்கள். ஏற்கெனவே, நேற்றைய தினத்திலே எங்களுடைய ராதாபுரம் தொகுதிக்கு புதிய மீன் இறங்குதளத்தை அம்மா அவர்களுடைய அரசு

[2020 மார்ச் 18

தந்திருக்கிறது. எனவே, எங்கள் மக்கள் மத்தியிலே சந்தோஷ அலை மோதிக்கொண்டிருக்கிறது. மனம் என்ற உற்சாக படகிலே அவர்கள் உல்லாசமாக ஊர்வலமாகச் சென்று கொண்டிருக்கிற சூழ்நிலையிலே, உவரி மற்றும் பெருமணல் ஆகிய இந்த இரண்டு ஊர்களிலும் தூண்டில் வளைவுகளைச் சீரமைத்துத் தர வேண்டும். அதுபோல, கூட்டப்புளியிலும், கூடுதாழையிலும் புதிய தூண்டில் வளைவுகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணை மிகுந்த இந்த அரசு, கருணை கூர்ந்து அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைத்துத் தருவார்களா என்று கேட்கின்றார். நேற்று 10 கோடி ரூபாய் அளவிற்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கு நிதி கொடுக்கப்பட்டது. ஆகையினால் அதற்கு thanks சொல்லியிருக்கின்றார். அதேபோல் ராதாபுரத்தில் புதிய மீனளத் துறை அலுவலகக் கட்டடமும் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெருமணல் மற்றும் உவரி கிராமத்தில் 66 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், கூடங்குளம் அணு மின் நிலையத்திலிருந்து 10 கோடி ரூபாய் CSR Fund வாங்கி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அம்மா அவர்களுடைய முயற்சியில் தூண்டில் வளைவு மீனவர்களுடைய நலனுக்காகக் கட்டி முடிக்கப்பட்டது. இயற்கையின் சீற்றத்தினால் சிதிலமடைந்துள்ள அந்த தூண்டில் வளைவுகளைச் சீரமைப்பதன்மூலம் அவர்களுடைய வாழ்வு மேம்படும் என்ற கருத்தின் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கையை அரசு எடுக்கும். இன்னொரு விஷயம் என்னவென்றால், கூடங்குளம் அணு மின் நிலையத்தில் CSR Fund இருப்பதனால், Government சார்பில் அவர்களை insist செய்து, முயற்சி எடுத்து அதனைச் செய்வதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. முதல் முயற்சியாக CSR Fund–ஐ கொண்டு அதனைச் சீரமைப்பதற்குண்டான நடவடிக்கையையும், அவர்களால் முடியவில்லை என்று சொன்னால், அரசு அதுகுறித்து பரிசீலனை

2020 மார்ச் 18]

செய்யும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அம்மா அவர்களுடைய அரசு. கருணை மிகுந்த அரசு. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அறிவிப்பு எங்களுடைய தொகுதி மக்களுடைய, மீனவர்களுடைய கண்களில் நிச்சயம் ஆனந்தக் கண்ணீரை வரவழைக்கும். கூடங்குளம் அணு உலை விரிவாக்கம் என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே, Corporate Social Responsibility Fund எனப்படுகின்ற அந்த CSR நிதியைப் பெற்று அந்த இரண்டு தூண்டில் வளைவுகளையும் சீரமைக்க வேண்டும். அதுபோல கூட்டப்புளியிலும், கூடுதாழையிலும் தூண்டில் வளைவு அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவாதம் தந்திருந்தார்கள், உறுதி தந்திருந்தார்கள். இது அம்மா அவர்களுடைய அரசு. எனவே, அதனை நிச்சயம் அமைத்துத் தருவேன் என்று கூறியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கண்ணீர் வணக்கத்தைச் சமர்ப்பித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

120—

கைத்தறிப் பூங்கா

***51540—டாக்டர் ப. சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நிலையூர் மற்றும் கைத்தறி நகரில் வசிப்பவர்களுக்கு கைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?